# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
# எம்பிலிபிட்டிய கல்வி வலயம்
## 2021 ஜூலை மாதம்
## வாரம் 1 தமிழ்மொழி செயலட்டை
**தயாரிப்பு : A. சாலிஹீன் ஆசிரிய ஆலோசகர்**

**தரம் - 5** **மாணவர் பெயர் - ............................................**

**1. பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்துக்களை எழுதுக.**

1. தலை கவிழ்தல் : ......................................................................
2. நட்டாற்றில் விடல் : ......................................................................
3. கண் திறத்தல் : ......................................................................
4. தட்டிக்கொடுத்தல் : ......................................................................
5. நாக்குப் புரளுதல் : ......................................................................

**2. பின்வரும் இணைமொழிகளை அட்டை ஒன்றில் எழுதி காட்சிப்படுத்துங்கள்.**

1. அருமை பெருமை
2. பாலுந் தேனும்
3. உயர்வு தாழ்வு
4. கையும் மெய்யும்
5. குப்பை கூளம்
6. பேரும் புகழும்
7. குன்றும் குழியும்
8. கரடு முரடு
9. மூலை முடுக்கு
10. மலையும் மடுவும்

**வேறுபட்ட இரண்டு சொற்கள் இணைந்து வந்து பொருள் தருவது இணை மொழியாகும். ஒரு குறிப்புச்சொல் இரட்டித்து வந்து பொருள் தருமாயின் இரட்டைக் கிளவி எனப்படும்.**

**இரட்டைக் கிளவி**

1. கடு கடு - கடுகடுப்பு
2. கர கர - கரகரப்பு
3. குசு குசு - குசுகுசுத்தல், இரகசியம் பேசுதல்
4. குறு குறு - குறுகுறுத்தல், மெதுமெதுத்தல்
5. சட சட - சடசடத்தல்
6. சிடு சிடு - சிடுசிடுத்தல்
7. பிசு பிசு - பிசுபிசுத்தல், பசைத்தன்மை
8. வெது வெது - வெதுவெதுப்பு, இளஞ்சூடு
9. புறு புறு - புறுபுறுத்தல், குறைசொல்லுதல்
10. சல சல - சலசலத்தல்

கணினி பதிப்பு : பி. நென்சி டொரதி

**3. இரட்டைக்கிளவிகளை வைத்து வாக்கியம் அமைத்தல்**

**எடுத்துக்காட்டு**

1. **அமலன் தன் நண்பனின் காதுக்குள் குசுகுசுத்தான்**
2. **மாமா சிடு சிடு வென்று பேசினார்.**

**4. பின்வரும் இரட்டைக்கிளவிகளை வைத்து கருத்துப்புலப்பட வாக்கியம் அமைக்க.**

1. மள மள : ..............................................................................................................
2. சல சல : ..............................................................................................................
3. பிசு பிசு : ..............................................................................................................
4. சட சட : ..............................................................................................................
5. குளு குளு : ..............................................................................................................

**5.கீழ் வரும் சொற்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கி திருத்தமாக எழுதுக.**

1. **முயச்சி – முயற்சி**

2 தவக்களை - .....................................

3. தொளிலாழி - ....................................

4. சந்தனம் - .....................................

5. நாகறீகம் - .....................................

6. அடயாளம் - .....................................

7. பதட்டம் - .....................................

8. சிகப்பு - .....................................

9. வெண்ணை - .....................................

10. சுகந்திரம் - .....................................